**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TIRUMANGALAM**
**Case No: STC.552/2022**
**PW :1**

| | | | |
|---|---|---|---|
| Name | : அய்யனார் | Caste | : |
| Father 's Name / Husband Name | :மாயாண்டி | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

(புகார்தாரர் ஆஜர். எதிரி ஆஜர் இல்லை. புகார்தாரர் மற்றும் எதிரி தரப்பில் வழக்கறிஞர் ஆஜர்).
**(10.07.2026)**
**முதல் விசாரணை**

சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் சொல்ல அனுமதிக்கப்படுகிறார்.

நான் தற்போது மேற்கண்ட முகவரியில் குடியிருந்து வருகிறேன். என்னுடைய வழக்கினை நிரூபணம் செய்ய நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். நிரூபண வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். அதிலுள்ள அனைத்து சங்கதிகளும் எனக்குத் தெரியும். 05.12.2021ம் தேதியிட்ட பேங்க் ஆப் இந்தியா சிந்துபட்டி வங்கி கிளையின் காசோலை எண் 018203 ரூ.10லட்சம் மதிப்புள்ள அசல் காசோலை ம.சா.ஆ.1 ஆகவும், 02.02.2022ம் தேதியிட்ட கனரா வங்கி கிளையின் மேற்படி காசோலை போதிய பணம் இல்லையென திருப்பப்பட்ட வங்கி குறிப்பாணை ம.சா.ஆ. 2 ஆகவும், 17.02.2022ம் தேதிய வழக்கறிஞர் அறிவிப்பு அலுவலக நகல் ம.சா.ஆ. 3 ஆகவும், 17.02.2022ம் தேதி அஞ்சலக ரசீது அசல் ம.சா..ஆ. 4 ஆகவும், 19.02.2022ம் தேதியிட்ட ஒப்புதல் அட்டை அசல் ம.சா.ஆ. 5 ஆகவும் குறியிடு செய்யப்படுகிறது. மனுப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

எதிரி தரப்புவழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இனங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.